1970 ஆகஸ்ட் 31]

நேரமும் செலவழிக்கமுடியுமா என்பதையும் பார்க்கவேண்டும். எங்கே அப்படி இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கலாம்.

* 159 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு வைத்திய வசதி அளிக்கும் தொழிலாளர் இன்சூரன்ஸ் திட்டத்திற்கு அனுமதி தர மத்திய அரசு மறுத்துவிட்டதா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்தின் நிதிப் பற்றாக்குறையின் காரணமாக, தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் மதுரைப் பகுதியில் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின் குடும்பங்களுக்கு நீட்டிக்கும் திட்டத்தை ஒத்திப்போடுமாறு 1969 மே திங்களில் மாநில அரசு முதலில் கேட்டுக்கொள்ளப்பட்டது. எனினும், பிறகு கூடிய தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்தின் நிலைக்குழு ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்கும் வரையறுக்கப்பட்ட மருத்துவ உதவி பெறும் வகையில் மேற்படி திட்டத்தை நீடிப்பதற்கு இசைந்தது. இதற்கிடையில் மதுரைப் பகுதியிலுள்ள ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்கு 3–6–1969 முதல் மேற்படி திட்டம் நீடிக்கப்பட்டது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, எங்கு எங்கு எல்லாம் இ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளின் மூலம் தொழிலாளர் குடும்பங்களுக்கு நன்மை தரப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நாடு முழுவதும் அந்தத் திட்டம் நிறைவேறுகிறது. அயனாவரத்திலே 650 படுக்கைகள் இருக்கின்றன. கோயம்புத்தூரில் உள்ள மருத்துவ மனையில் 300 படுக்கைகள் இருக்கின்றன. மதுரையிலே உள்ள மருத்துவ மனையில் 202 படுக்கைகள் இருக்கின்றன. இந்தத் திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் பல்வேறு மருத்துவ மனைகள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. தனியாகக் கேள்வி கேட்டால் விவர அறிக்கையை அளிக்கிறேன்.

Commercial Broadcast in All-India Radio.

* 135. Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have given advertisements in the Commercial Broadcasting Service of the All-India Radio; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) காந்தி நூற்றாண்டு விழா என்பதாலும், கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் பொருள்களின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டும் 3—11—1969-லிருந்து 21—11—1970 வரை, வானொலி